IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, VELLORE DISTRICT.

**PAGE NO.32/2014**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Calender | : | CC.61/2013 | | |
| Miscellaneous | : | | | |
| Preliminary Register | : | | | |
| Sessions | : | | | |
| Deposition of witness for | : | Prosecution | : | pw-3 |
| | | Defence | : | |
| | | Court | : | |
| Name | : | கோவிந்தராஜ் | | |
| Father's Name | : | ஜெயராமன் | | |
| Village | : | கீழாந்தூர் | | |
| Taluk | : | அரக்கோணம் | | |
| Caste | : | - | | |
| Calling | : | விவசாயம் | | |
| Religion | : | இந்து | | |
| Age | : | 44 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.10.2019.

நான் கீழாந்தூரில் வசிக்கிறேன். விவசாயம் வேலை செய்கிறேன். பிகார்தாரர் ரவியை தெரியும். எதிரிகளை தெரியும். சம்பவத்தை பற்றி எனக்கு தெரியாது நான் பார்க்கவில்லை. போலிசார் என்னிடம் முருகன் மற்றும் அவரது ஊர்காரருடன் சண்டை ஏற்பட்டதாக கூறி என்னிடம் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் கானட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான் அது அ..த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை அதற்கு பிறகு விசாரணை செய்தார்களா என்றால் இல்லை

அரசு தரப்பு வழக்கறிஞர்யை பிறழ் சாட்சியாக கருத கோரி கு.வி.செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.

01.04.2013ம் தேதி 10 மணி அளவில் நான் ஊரில் இருந்த போது அரக்கோணம் கிராமிய காவல் போலிசார் எங்கள் ஊரை சேர்ந்த ரவி என்பவருக்கும் எதிரிகள்

முருகன் வகையராவிற்கும் சண்டை நடந்ததாக கூறப்பட்ட இடத்தில் பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்த போது அந்த பார்வை மகஜரில் சாட்சியாக கையெபாப்பம் இட்டேன் என்றும் என்னுடன் தெய்வசிகாமணி என்பவரும் கையெழுத்து செய்தார் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.